உ
*இலாபம்*
அனைவருக்கும் இனிய மற்றும் வளமான நிதியாண்டு (FY 2026-27 வாழ்த்துக்கள்!
இந்த புதிய நிதியாண்டு உங்கள் முதலீடுகள், தொழில் மற்றும் நிதி இலக்குகளில் பெரும் அபிவிருத்தியையும் சிறப்பான நிதி வளர்ச்சியையும், திடமான உடல்நலத்துடன் மனநிறைவையும் கொண்டுவரட்டும்


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்








| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 91 | உள்ளூர் - 01.04.2026 | புதன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 91 | வெளியூர் - 02.04.2026 | வியாழன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



**கணவன் - மனைவி சண்டைகளை குறைக்க 'வாஸ்து குறிப்புகள்'!**

**பஞ்சாப் – சிந்து வங்கி 1000 காலியிடங்கள்!**

**நகை கடன் இனி இவ்வளவு தான்.. ரிசர்வ் வங்கி!**

**அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!**

## கேரளத்துக்கு பிரதமர் மோடி 4–ந்தேதி மீண்டும் வருகை!



திருவனந்தபுரம், ஏப். 01–

கேரளம் மாநிலத்தில் சட்டசபை தேர்தல் வருகிற 9–ந்தேதி நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் 7 நாட்களே உள்ளதால், தேர்தலில் களம் காணும் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேட்டைகள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கேரள மாநிலத்தில் கம்யூனிஸ்டு கட்சிகள் அடங்கிய இடதுசாரி ஜனநாயக முன்னணி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சட்டசபை தேர்தலில் போட்டியிடுகின்றன.

மொத்தம் உள்ள 140 தொகுதிகளில் பா.ஜ.க. 98 தொகுதிகளிலும், காங்கிரஸ் 92 தொகுதிகளிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 76 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. மற்ற தொகுதிகளில் கூட்டணி கட்சிகளை களமிறக்கி உள்ளன.

பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி கடந்தமாதம் 29–ந்தேதி பிரசாரம் செய்தார். அன்றைய தினம் அவர் பாலக்காட்டில் நடந்த பொதுக்கூட்டம் மற்றும் திருச்சூரில் நடந்த சாலை பேரணியில் பங்கேற்று ஆதரவு திரட்டினார்.


இந்தநிலையில் பிரதமர் மோடி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட வருகிற 4–ந்தேதி மீண்டும் கேரளம் மாநிலத்துக்கு வருகிறார். அவர் அன்றைய தினம் முதலில் திருவனந்தபுரத்தில் சாலைப்பேரணியில் கலந்து கொள்கிறார். பிரதமர் மோடி பங்கேற்கும் அந்த சாலைப்பேரணி திருவனந்தபுரம் சென்ட்ரல் மற்றும் நேமம் தொகுதிகளின் வழியாக கில்லிப்பாலத்தில் இருந்து கரமனை வரை 1.5 கிலோ மீட்டர் தூரம் நடைபெறுகிறது. அதன்பிறகு திருவவ்லாவில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பங்கேற்று பேசுகிறார். அந்த கூட்டத்தில் 10 சட்டமன்ற தொகுதிகளை சேர்ந்த பா.ஜ.க. கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்துகொள்கின்றனர். பொதுக்கூட்டத்தில் 30 ஆயிரம் பேர் வரை திரளுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரதமர் மோடி தேர்தல் பிரசாரத்திற்காக ஒரு வாரத்திற்குள் இரண்டாவது முறையாக கேரளம் வருகிறார். இதனால் அம்மாநில பா.ஜ.க. கட்சியினர் உற்சாகமடைந்துள்ளனர்.

## 'ஆபரேஷன் எபிக் ஃபியூரி'

# 'நோ' டீல்

# ஈரானை விட்டு வெளியேற ரெடி

## டிரம்ப்!!






அமெரிக்கா, ஏப். 01–

ஈரான், அமெரிக்கா – இஸ்ரேல் நாடுகளுக்கு இடையிலான மோதல் தொடர்ந்து 4 வாரங்களை கடந்து நீடித்து வரும் நிலையில் ஈரான் மீதான ராணுவ தாக்குதலை இன்னும் மூன்று வாரங்களுக்குள் முடிவுக்கு கொண்டுவரக் கூடும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார். அதேவேளையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, தனது நாடு ராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கும் என்று கூறியுள்ளார்.

**டிரம்ப் கருத்து**

சமீபத்தில் ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன், எதிரிகள் மீண்டும் போர் தொடராது என்று உறுதியளித்தால், போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான மன உறுதி தங்கள் நாட்டிற்கு இருப்பதாக கூறியதைத் தொடர்ந்தே அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய தலைவர்களின் இந்த கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

செவ்வாயன்று வெள்ளை மாளிகையில் பேசிய அமெரிக்க அதிபர் டிரம்ப், "நாங்கள் மிக விரைவில் வெளியேறுவோம்" என்று கூறினார். மேலும், இந்த வெளியேற்றம் ஒருவேளை இரண்டு வாரங்கள் அல்லது மூன்று வாரங்களுக்குள் நிகழலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 'ஆபரேஷன் எபிக் ஃபியூரி' நடவடிக்கையை அமெரிக்கா முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஈரான் எந்த ஒப்பந்தமும் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

இதற்கு முன்பு இந்த போர் குறித்து முன்னுக்கு பின்னாக டிரம்ப் பேசி வந்த நிலையில், ஹார்முஸ் நீரிணையை திறந்து வைக்கும் பொறுப்பு அமெரிக்காவை விட அதைச் சார்ந்துள்ள நாடுகளுக்கே அதிகம் இருக்க வேண்டும் என்று கூறினார். நாங்கள் இதைச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். அமெரிக்காவின் போர் முயற்சிகளுக்கு நட்பு நாடுகள் ஆதரவு வழங்காததால் ஏற்பட்ட அதிருப்தியை தொடர்ந்து இந்தமாற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

**நெதன்யாகு கருத்து**

டிரம்ப் ஒரு கருத்து தெரிவித்த நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஈரானுக்கு எதிரான தனது ராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் தொடர்ந்து முன்னெடுக்கும் என்றும், ஈரானின் பயங்கரவாத ஆட்சியைத் தொடர்ந்து நசுக்குவோம் என்றும் தெரிவித்தார். யூதர்களின் 'பாஸோவர்' (Passover) விடுமுறை தினத்திற்கு முந்தைய நாள் தொலைக்காட்சியில் உரையாற்றிய அவர், "இந்த நடவடிக்கை இன்னும் முடிவுக்கு வரவில்லை. பயங்கரவாத ஆட்சியை நாம் தொடர்ந்து நசுக்குவோம்" என்று கூறினார்.

## ஏப். 3 முதல் தென் மாவட்டங்களில் தி.மு.க. ஸ்டாலின் பிரசாரம்!



சென்னை, ஏப். 01–

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாள ர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் இரண்டாம் கட்டமாக திருநெல்வேலியில் பிரசாரத்தைத் தொடங்குகிறார்.

பொதுக்கூட்டம் நடைபெறும் இடங்கள்

03.04.2026 (வெள்ளிக்கிழமை) மாலை 5 மணி – திருநெல்வேலி – பாளையங்கோட்டை

04.04.2026 (சனிக்கிழமை) காலை 9 மணி – நாகர்கோயில்

04.04.2026 (சனிக்கிழமை) மாலை 5 மணி – சங்கரன்கோவில்

05.04.2026 (ஞாயிறு) காலை 9 மணி – விருதுநகர்

05.04.2026 (ஞாயிறு) மாலை 5 மணி – திருமங்கலம்

ஆகிய இடங்களில் பொதுக்கூட்டத்தில் அந்தந்த பகுதி வேட்பாளர்களை அறிமுகம் செய்து வாக்கு சேகரிக்கிறார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருப்பூரில் அனைத்து ரக நூல்களும் ரூ.12 உயர்த்தப்படுவதாக நூற்பாலைகள் அறிவிப்பு!




திருப்பூர், ஏப். 01–

திருப்பூரில் அனைத்து ரக நூல்களும் ரூ.12 உயர்த்தப்படுவதாக நூற்பாலைகள் அறிவித்துள்ளது.

தரமான பஞ்சு தட்டுபாடு காரணமாக நூல் விலை உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் நூல் விலை ரூ.24 வரை உயர்ந்துள்ளதால் பின்னலாடை உற்பத்தியாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

## இந்தியாவில் 8–வது மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் தொடக்கம்..!!





புதுடெல்லி, ஏப். 01–

நாடு முழுவதும் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான முதற்கட்ட பணிகள் இன்று ( 01.04.2026)முதல் தொடங்கியது.

வீட்டில் உள்ள அறைகளின் எண்ணிக்கை, டிவி, இருசக்கர வாகனம், கணினி உள்ளிட்ட பொருட்களின் எண்ணிக்கை உள்ளிட்ட 33 கேள்விகள் இதில் கேட்கப்படும். தேர்தல் நடைபெற உள்ளதால் தமிழ்நாட்டில் வரும் ஜூலை 17ம் தேதி முதல் கணக்கெடுப்பு பணிகள் தொடங்க உள்ளன. முதற்கட்ட பணிகளுக்கு பிறகு 2027 பிப்ரவரியில் 2ம் கட்ட பணிகள் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக, இன்று முதல் 15 ஆம் தேதி வரை டெல்லி, கோவா, கர்நாடகா, ஒடிசா, சிக்கிம், மிசோரம், அந்தமான் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவுகளில் சுயவிவர கணக்கெடுப்பு பணி நடைபெறும் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. ஏப்ரல் 16 ஆம் தேதி முதல் மே 15 ஆம் தேதி வரை வீட்டுப் பட்டியல் மற்றும் வீட்டு வசதி கணக்கெடுப்பு நடத்தப்படும். மத்திய அரசின் சுயகணக்கெடுப்பு இணையதளத்தில் பொதுமக்கள் தாங்களாகவே செல்போன் எண் மற்றும் பிற அடிப்படை விவரங்கள் மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை வெற்றிகரமாக பூர்த்தி செய்த உடன், ஒரு தனித்துவமான சுய கணக்கெடுப்பு அடையாள எண் உருவாக்கப்படும். அதனை, கணக்கெடுப்பிற்கு வரும் பணியாளர்களிடம் பகிர்ந்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை பொறுத்தவரை ஜூலை 17 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை சுயவிவர கணக்கெடுப்பும், ஆகஸ்ட் 1 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை வீட்டு பட்டியல் கணக்கெடுப்பும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## கூட்டணி கட்சிகள் ஏன் அதிமுக சின்னத்தில் போட்டியிடவில்லை? முதல்வர் ஸ்டாலின் கேள்வி!



திருச்சி, ஏப். 01–

கூட்டணி கட்சிகள் ஏன் அதிமுக சின்னத்தில் போட்டியிடவில்லை? என முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பி உள்ளார்.

திருச்சி தென்னூர் உழவர் சந்தையில் நடந்த தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில், கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் 9 பேரை ஆதரித்து முதல்வர் ஸ்டாலின் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: முழு சந்திரமுகியாகவே மாறிவிட்டார் இபிஎஸ். அவர் ஆட்சிக்கு வந்தால், எல்லோரையும் அடகு வைத்து விடுவார். தமிழகத்தை விற்று விடுவார். டூர் மோடில் இருக்கும் பிரதமர் மோடி பொத்தாம் பொதுவாக திமுக மீது குற்றச்சாட்டு கூறுகிறார்.

ஒரு வாரம் தமிழகத்துக்கு வந்து தங்கி இருந்தால் இங்கு செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் அவருக்கு தெரியும். தமிழகம் எவ்வாறு தலை நிமிர்ந்து சிறந்திருக்கிறது என்று தெரிந்து கொள்ளுங்கள். நாம் போராடுவது திமுக வெற்றிக்காக மட்டுமல்ல, தமிழகம் வெற்றிக்காக; பாஜ., டப்பா இன்ஜின் முன்னாடி திமுக சூப்பர் பாஸ்ட் இன்ஜின் தலை குனியாது. எல்லா இடங்களிலும் கூட்டணியில் பிரச்னையில்லை என்று சொல்கிறீர்களே?

பின் ஏன் டில்லிக்கு சென்றீர்கள்; கூட்டணிக்கு அதிமுக தான் தலைமை என்றால், கூட்டணி கட்சிகள் ஏன் அதிமுக சின்னத்தில் போட்டியிடவில்லை? கடந்த முறை திருச்சியிலுள்ள 9 தொகுதிகளிலும் மக்கள் வெற்றியை தந்தார்கள்; இம்முறையும் 100% வெற்றி கிடைக்கும்; கடந்த 5 ஆண்டுகளில் பல முத்திரை திட்டங்களை கொண்டு வந்துள்ளோம். கொடுத்த வாக்குறுதிகளை மறக்கவும் மாட்டேன். மறுக்கவும் மாட்டேன். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

திருச்சி கிழக்கு தொகுதிக்குட்பட்ட காந்தி மார்க்கெட்டில் வாக்கிங் சென்று முதல்வர் ஸ்டாலின் ஓட்டு சேகரித்தார். அப்போது தமிழக முதல்வர் ஸ்டாலின், அமைச்சர்களுடன் சாலையோர டீக்கடையில் அமர்ந்து தேநீர் அருந்தினார்.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 01.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 18-ம் தேதி

# இந்தியர்களே! தங்கம் விலையை பத்தின கவலையே இனி வேண்டாம்!!




சர்வதேச அளவில் நடக்கும் போர், வர்த்தக மோதல், பொருளாதார சரிவு என எங்கோ ஓர் நாட்டில் நடக்கும் எந்த ஒரு நிகழ்வும் இந்தியாவில் தங்கம் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதற்கு முக்கிய காரணம் இந்தியா தனக்கு தேவையான பெரும் அளவிலான தங்கத்தை வெளிநாடுகளில் இருந்து தான் இறக்குமதி செய்கிறது. தங்க இறக்குமதிக்காக வெளிநாடுகளை சார்ந்திருப்பதால் தான் சர்வதேச அளவில் நிகழக்கூடிய எந்த ஒரு மாற்றங்களும் இந்திய சந்தையில் தங்கம் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்த பிரச்சனைக்கு இருக்கக்கூடிய ஒரே தீர்வு உள்நாட்டிலேயே தங்கம் தயாரிப்பது தான். மத்திய, மாநில அரசுகள் சார்பாக நாட்டின் எந்தெந்த பகுதிகளில் பூமிக்கு அடியில் தங்கம் இருக்கிறது அவற்றை தோண்டி எடுக்க முடியுமா என்பது குறித்த ஆய்வுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மேலும் கண்டறிக Jewelry jewellers புவியியல் ஆய்வு சேவைகள் Gems & Jewelry சுரங்க உபகரணங்கள் இந்திய பொருளாதாரம் உள்நாட்டில் தங்கம் உற்பத்தி தொடங்கி நாட்டின் தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு நாம் உற்பத்தி செய்ய தொடங்கி விட்டால் சர்வதேச நிகழ்வுகள் தங்கம் விலையை உயர்த்தாது அதே வேளையில் தங்கத்தின் விலை பெருமளவு குறையும். அந்த வகையில் இந்தியர்களுக்கு ஒரு நற்செய்தி வெளியாகி இருக்கிறது.

ஆந்திர மாநிலத்தில் மிகப்பெரிய தங்கப் புதையல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆந்திர மாநிலத்தின் ஜொன்னகிரி பகுதியில் பூமிக்கு அடியில் பெரிய அளவில் தங்கம் புதைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு தனியார் நிறுவனம் இதனை குத்தகைக்கு எடுத்து தங்கத்தை பிரித்து எடுப்பதற்கான பணிகளை தொடங்கி இருக்கிறது. வழக்கமாக அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் தான் இவ்வாறு தங்கத்தை தோண்டி எடுத்து உலோகமாக மாற்றி வழங்கும், அதற்கான குத்தகையை இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு தனியார் நிறுவனத்திற்கு இது வழங்கப்பட்டிருக்கிறது.

Geomysore Services என்ற தனியார் நிறுவனம் இங்கே தங்கத்தை எடுத்து தங்கள் பிராண்ட் பெயரிலேயே விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது. ஒரு காலத்தில் இந்தியா மிகப்பெரிய தங்க உற்பத்தியாளராக இருந்தது. குறிப்பாக கோலார் தங்க சுரங்கம் 1880 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 2001 ஆம் ஆண்டு வரை உள்நாட்டில் பெருமளவில் தங்கம் உற்பத்தி செய்து வந்தது. அடுத்ததாக ஹட்டி கோல்டு மைன்ஸ் என்ற நிறுவனம் தங்க சுரங்கம் அமைத்தது.

அதற்கு அடுத்ததாக மூன்றாவது ஒரு நிறுவனம் பெரிய தங்க சுரங்கத்தை அமைக்கிறது. தற்போது ஒட்டுமொத்த இந்தியாவின் எதிர்பார்ப்பும் இந்த ஜொன்னகிரி தங்கச் சுரங்கத்தின் மீதுதான் இருக்கிறது. இந்த நிறுவனம் இந்த பகுதியில் தங்கத்தை பூமிக்கு அடியில் இருந்து பிரித்து எடுத்து உலோகமாக மாற்றி நேரடியாக தங்களுடைய பெயரில் ஒரு பிராண்டை உருவாக்கி உள்நாட்டு நகை விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்ய திட்டமிட்டு இருக்கிறது. இது நகை விற்பனை செய்யக்கூடிய நிறுவனங்களுக்கு வரி உள்ளிட்ட எதுவும் இல்லாமல் குறைந்த விலையில் தங்கம் கிடைப்பதற்கு வழிவகை செய்யும். இதனால் தங்கத்தின் விலை குறைவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. தற்போது இந்த ப்ராஜெக்ட் சோதனை அடிப்படையில் தொடங்கப்பட்டிருக்கிறது. வணிக ரீதியில் அல்லாத உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

முதலில் 2027 ஆம் ஆண்டு நிதி ஆண்டில் 600 கிலோகிராம் தங்கம் பிரித்தெடுக்க முடிவு எடுத்திருப்பதாக நிறுவன அதிகாரிகள் கூறுகின்றனர். அடுத்தகட்டமாக படிப்படியாக ஓராண்டுக்கு இரண்டு டன்கள் தங்கம் வரை பிரித்தெடுப்பது என இலக்கு நிர்ணயம் செய்திருக்கிறது. இது நடந்து விட்டால் இந்தியாவிலேயே அதிக அளவு தங்கம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு பகுதியாக ஜொன்னகிரி மாறும். ஒரு காலத்தில் இந்தியா , சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு இணையாக தங்கம், உற்பத்தி செய்தது. ஆனால் 1990களுக்கு பின் அரசு இரும்பு, காப்பர் உள்ளிட்டவற்றை தோண்டி எடுப்பதில் அதிக கவனம் செலுத்தியது. இதனால் தங்க சுரங்கங்கள் கண்டறியும் பணியும் நிறுத்தப்பட்டது. தற்போது தான் அவை மீண்டும் தொடங்கப்பட்டு தனியார் துறைக்கும் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

## அ.இ.பு.த.ம.மு.க.வின் 2-ம் கட்ட வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு...!



சென்னை, ஏப். 01–

38 தொகுதிகளில் போட்டியிடும் 2–ம் கட்ட வேட்பாளர்கள் பட்டியலை வி.கே.சசிகலா வெளியிட்டார். மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதியில் பாமக போட்டியிடும் என்று சசிகலா அறிவித்துள்ளார். முதற்கட்ட வேட்பாளர் பட்டியலில் மயிலாடுதுறை தொகுதிக்கு ஏற்கனவே வேட்பாளரை அறிவித்திருந்த நிலையில், பாமகவின் வேண்டுகோளுக்கிணங்க வேட்பாளரை திரும்ப பெறுவதாக சசிகலா கூறினார். கூட்டணி கட்சிகளுக்கு திருவாடானை, ஸ்ரீவைகுண்டம் உள்ளிட்ட 6 தொகுதிகளை சசிகலா ஒதுக்கினார். சிவகங்கையில் வி.பிரபு போட்டியிடுவதாக அறிவித்திருந்த நிலையில் தற்போது முருகானந்தம் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார்.



# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## 6 இடங்களில் பேசுவதற்கு மட்டுமே அனுமதி ரோடு ஷோ நடத்த விஜய்க்கு அனுமதி வழங்கவில்லை: தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தகவல்!



சென்னை, ஏப். 01–

சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நிருபர்களிடம் கூறியதாவது: முதல் நாளில் 573 வேட்புமனுக்கள் இதுவரை தாக்கலாகி உள்ளன. இன்று முதல் விவரங்கள் தவெக பிரசாரத்தின் போது ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல் குறித்து விரிவான அறிக்கை அளிக்குமாறு சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. த.வெ.க. சாலை நெடுக ரோடு ஷோ செல்ல அனுமதி வாங்கவில்லை. 6 இடங்களில் கூட்டத்தை நடத்த அனுமதி பெற்றிருந்த னர். விஜய் பிரசார சம்ப வத்தில் தேர்தல் பார்வையா ளர்களின் புகார்கள் வந்து ள்ளதாக கூறுகிறீர்கள். பலர் மீது எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டு இருப்பது தொடர்பாக அறிக்கை கேட்டுள்ளோம். முதலில் வேட்புமனு தாக்கல் செய்தவரின் வேட்புமனு முதலாவதாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். வேட்பு மனுவில் திருத்தங்கள் இருந்தால் அதை பரிசீலனைக்கு முன்னரே முடித்திருக்க வேண்டும். வேட்பாளரால் வர முடியவில்லை என்றால் அவரது அங்கீகாரம் பெற்ற முகவர் அவர் சார்பில் வரலாம். வேட்புமனுவை நிரப்புவது உள்பட இந்த நடைமுறைகள் பற்றி அரசியல் கட்சிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டு இருந்தது. ஒரு வாக்குச்சாவடிக்கு 1,200 வாக்காளர்கள் என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது பெயர் சேர்ப்புக்காக 6 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இதனால் சில வாக்குச்சாவடிகளில் 1,200க்கும் மேலான வாக்காளர்கள் வரக்கூடும். அதுபோன்ற வாக்குச்சாவடிகளுக்காக துணை வாக்குச்சாவடி அமைக்கப்படும். அது அந்த வாக்குச்சாவடிக்கு அருகேயுள்ள அறையில் அமைக்கப்படும். சில உயர் அதிகாரிகளை இடமாற்றம் செய்யும்படி எனது வழியாக தேர்தல் ஆணையத்திற்கு த.வெ.க. கடிதம் அனுப்பியுள்ளனர். அதுபற்றி தேர்தல் ஆணையம் முடிவு செய்யும். இவ்வாறு அவர் கூறினார்.

## என் மகன் பிரசாரம் செய்து நான் வெற்றி பெற வேண்டிய அவசியம் இல்லை - கருணாஸ்!



சிவகங்கை, ஏப். 01–

சிவகங்கையில் செய்தியாளர்களை சந்தித்த நடிகர் கருணாஸ் தனது மகன் கென் பிரசாரம் செய்து தான் வெற்றி பெற வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்தார். இதுகுறித்து பேசிய கருணாஸ், ''என் மகன் கென்–க்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை. அவர் பிரசாரம் செய்து நான் வெற்றி பெற வேம்டிய அவசியம் இல்லை. நான் ஏற்றுக் கொண்ட மதச்சார்பற்ற கூட்டணியின் தலைவர் அண்ணன் மு.க. ஸ்டாலின் கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்த நலத்திட்டங்கள், தற்போது அறிவித்துள்ள தேர்தல் வாக்குறுதிகளை கூறினாலே போதும். அவர் அறிவித்துள்ள இல்லத்தரசி திட்டம் ஒன்றே என்னை சிவகங்கையில் வெற்றி பெற வைக்கும்,'' என்றார்.

## திருச்சியில் விஜய் பிரச்சாரத்திற்கு காவல்துறை அனுமதி!




சென்னை, ஏப். 01–

தவெக தலைவர் விஜய் ஏப். 2–ல் திருச்சியில் வேட்பு மனு தாக்கல் செய்யவுள்ளார். வேட்புமனுத் தாக்கலைத் தொடர்ந்து திருச்சியில் பிரச்சாரமும் செய்கிறார். இதற்காக தவெக தரப்பில் திருச்சி மாநகர காவல் ஆணையரிடம் பிரசாரத்திற்கான பாதுகாப்பு மற்றும் அனுமதி கேட்டு மனு அளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் காவல்துறை விஜய் பிரச்சாரத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. நேற்று பொதுமக்களுக்கும், விஜய்யின் வாகன அணிவகுப்பிற்கும் போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என தவெக தரப்பில் குற்றம் சாட்டப்பட்டு வில்லிவாக்கம், அண்ணாநகர் தொகுதிகளில் பிரச்சாரம் ரத்து செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

2026 சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஏப்ரல் 23–ஆம் தேதியும், வாக்கு எண்ணிக்கை மே 4–ஆம் தேதியும் நடைபெறவுள்ளன.

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை ஏப்ரல் மாதம் 'தகிக்கும்': வெப்ப அலை வீசும்!




சென்னை, ஏப். 01–

கோடை கால (ஏப்ரல்) மாதத்துக்கான நீண்ட கால வானிலை குறித்து வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாட்டில் இயல்பைவிடவும் அதிகமான மழை பெய்யும் வாய்ப்புள்ளது. இது வெப்பநிலையில் இருந்து ஓரளவுக்கு நிவாரணம் வழங்கினாலும், வடக்கு மற்றும் கடலோர தமிழகத்தில் சில பகுதிகளிலும், உள் தமிழ்நாட்டின் சில பகுதிகளிலும் இயல்பைவிட அதிக வெப்பநிலையுடன் கூடிய வெப்பஅலை (Heat Wave) அதிக நாட்கள் நீடிக்கும் வாய்ப்புள்ளது.

இதனால் வெப்ப அழுத்தம் ஏற்படும், மாநிலம் முழுவதும் அதிகபட்சமாக பகல் மற்றும் இரவு நேரத்தில் வெப்பநிலை இயல்பைவிட அதிகமாகவும், அசாதாரணமாகவும் இருக்க வாய்ப்புள்ளது. இதனால் அதிக வெப்பமான சூழ்நிலை காணப்படுவதுடன், இரவு நேர குளிர்ச்சியும் குறையும். ஒட்டுமொத்தமாக இந்த ஏப்ரல் மாதம் வழக்கத்தை விட அதிக வெப்பம் தகிக்கும் மாதமாக இருக்கும். மழை இடையிடையே பெய்தாலும் வெப்பத்தால் ஏற்படும் அசவுகரியங்கள் நீடிக்கும்.

## நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முந்தைய அரசின் கடன்களை கட்ட மாட்டோம்: சீமான்!




கோவை, ஏப். 01–

கோவையை அடுத்த சூலூர் அண்ணா கலையரங்கில் நடந்த பொதுக்கூட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு தனது கட்சி வேட்பாளரை ஆதரித்து நேற்று பிரசாரம் செய்தார். அப்போது அவர் பொதுமக்கள் மத்தியில் பேசும்போது கூறியதாவது:–

சட்டமன்ற தேர்தலை வழக்கமான தேர்தலாக எளிதில் கடந்து போகக் கூடாது. 50 ஆண்டுகளாக இரண்டு திராவிட கட்சிகளும் மாறி மாறி ஆட்சி செய்து வருகின்றன. இந்த ஆட்சி முறையில் என்ன மாற்றம் வந்துள்ளது? மக்கள் என்ன முன்னேற்றம் அடைந்துள்ளனர்? என்பதை ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

சட்டமன்ற தேர்தலை மாற்றத்துக்கான களமாக எண்ணி அணுகுங்கள். சாதி பார்த்து வாக்களிக்க வேண்டும் என்றால் எங்களுக்கு வாக்களிக்க வேண்டாம். நாங்கள் சாதிக்க வேண்டும் என்று நினைத்தால் வாக்களியுங்கள். உலகத்தரமான கல்வியை தமிழகத்திற்கு கொடுத்து மாற்றத்தை ஏற்படுத்துவோம். மருத்துவம் மகத்தான சேவை. பாகுபாடின்றி சமமாக அனைவருக்கும் கொடுப்போம். தண்ணீர் விற்பனைப் பொருள் அல்ல. அதை விற்றால் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை கொடுப்போம். தடையின்றி கியாஸ் சிலிண்டர் கொடுப்போம். 10 ஆண்டுகள் பசுமை திட்டம், பல கோடி பனைமரம் நடும் திட்டம் கொண்டு வந்து படித்தவர், படிக்காதவர் என அனைவருக்கும் அரசு வேலை கொடுப்போம். நடிகரை நம்பி நாட்டை கொடுத்துவிட்டு திரிய வேண்டாம்'' என்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சீமான், "வீண் செலவுகளால் தமிழக மக்களை கடனாளிகள் ஆக்குவதை ஏற்க முடியாது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முந்தைய அரசின் கடன்களை திருப்பிச் செலுத்த மாட்டோம்'' என்றார்.

## பாகிஸ்தான் - ல் ஸ்மார்ட் லாக்டவுன்..



புதுடெல்லி, ஏப். 01–

மத்திய கிழக்கு நாடுகளில் உருவான போர் காரணமாக உலகளாவிய எரிபொருள் சந்தை பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் வேளையில் அதிகப்படியான பாதிப்பை எதிர்கொண்டு வரும் நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தான் முதன்மையான நாடாக உருவெடுத்துள்ளது. ஏற்கனவே பெரும் பொருளாதார பாதிப்புகளை எதிர்கொண்டு வந்த பாகிஸ்தானுக்கு இந்த எரிபொருள் விலை உயர்வு மிகப்பெரிய அளவிலான தாக்கத்தை கொடுத்துள்ளது.

நிதி சுமையை குறைக்கும் நோக்கில் பாகிஸ்தான் அரசு ஏற்கனவே பல்வேறு கட்டுப்பாட்டுகளை கொண்டு வந்துள்ள நிலையில் புதிதாக சில கட்டுப்பாடுகளை கொண்டு வர ஆய்வுகளை தொடங்கியுள்ளது. ஸ்மார்ட் லாக்டவுன் "இந்த நெருக்கடியை சமாளிக்க, பாகிஸ்தான் அரசு "ஸ்மார்ட் லாக்டவுன் என்ற கட்டுப்பாட்டு முறையை பரிசீலித்து வருவதாத தகவல் வெளியாகியுள்ளது. இது கொரோனா காலத்தில் நடைமுறைக்கு வந்த முழுமையான லாக்டவுன் போல அல்லமல் குறிப்பிட்ட பகுதிகள் மற்றும் செயல்பாடுகளை மட்டுமே கட்டுப்படுத்தும் அணுகுமுறை என தெரிகிறது. உலகம் முழுவதும் எனர்ஜி லாக்டவுன் குறித்து பேசி வரும் வேளையில் ஃபிலிப்பைன்ஸ் அரசு National energy emer–gency லாக்டவுன் நடைமுறைப்படுத்தியுள்ளது பெரும் அதிர்ச்சி அளிக்கிறது.



## கணவன் - மனைவி சண்டைகளை குறைக்க உதவும் 'வாஸ்து குறிப்புகள்'!



மனிதர்களின் வாழ்க்கையில் வாஸ்து குறிப்புகளுக்கு முக்கிய பங்கு வழங்கப்படுகிறது; குறிப்பாக, தனி நபர் வாழ்க்கையில் எதிர்பார்த்த திருப்பங்களை கொண்டு வர இந்த வாஸ்து சாஸ்திரம் உதவும் என நம்பப்படுகிறது. மேலும், குடும்ப வாழ்க்கையில் கஷ்டம், நிதி பிரச்சனைகள், கணவன் – மனைவி இடையே காணப்படும் மனஸ்தாபங்களை முடிவுக்கு கொண்டு வரவும் இந்த வாஸ்து சாஸ்திர குறிப்புகள் உதவும் என நம்பப்படுகிறது. இந்நிலையில், அந்த குறிப்புகளை எப்படி பயன்படுத்துவது? வாஸ்து பரிகாரங்கள் மூலம் குடும்ப வாழ்க்கையில் மன அமைதி கொண்டு வருவது எப்படி? என இங்கு பார்க்கலாம்.

**உணவு மேசையில் மாற்றம் செய்யுங்கள்!**

வீட்டில் உங்கள் குடும்ப உறவுகளுடன் இணைந்து உணவு உட்கொள்ளும் மேசையில் ஒரு சில மாற்றங்களை செய்வதன் மூலம், தம்பதியரிடையே காணப்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம். அந்த வகையில்,

1. உங்கள் உணவு மேசையை வீட்டின் கிழக்கு அல்லது மேற்கு திசையில் வைப்பது நல்லது. மற்ற திசை களில் வைப்பது, வாஸ்து பிரச்சனைகளுக்கு வழிவகுப்பதோடு – உறவுகளுக்கு மத்தியில் காணப்படும் மனஸ்தாபங்களை அதிகரிக்கும், மன அமைதியை பாதிக்கும் என கூறப்படு கிறது.

2. வீட்டில் பயன்படுத்தும் உணவு மேசை வட்டம், செவ்வகம், சதுரம், ஓவல் என பல்வேறு வடிவங்களில் கிடைக்கும் நிலையிலும், செவ்வக வடிவத்தை தேர்வு செய்வது நல்லது என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

3. குடும்ப உறவுகள் அனைவரும் (நாள் ஒன்றுக்கு குறைந்தது ஒரு முறை) ஒன்றாக அமர்ந்து உணவு உண்பது நல்லது. இதன் போது குடும்ப தலைவருக்கு வடக்கு அல்லது கிழக்கு நோக்கி அமரும் நாற்காலியை ஒதுக்குங்கள்.

**சமையலறையில் செய்ய வேண்டிய மாற்றம்!**

வாஸ்து குறிப்புகளின் படி உங்கள் சமையலறையில் நீங்கள் செய்யும் பயனுள்ள மாற்றங்கள், தம்பதியரிடையே காணப்படும் வழக்குகள் மற்றும் வாக்குவாதங்களை குறைக்கும், பிரச்சனைகளுக்கு தீர்வு கொண்டு வரும் என நம்பப்படுகிறது.

1. வாஸ்து சாஸ்திர நிபுணர்களின் கூற்றுப்படி, வீட்டின் தென்கிழக்கு திசையில் சமையலறை அமைப்பது நல்லது. அக்னியுடன் தொடர்பு கொண்ட இந்த பகுதியில் சமையலறை வைப்பது, வீட்டில் நேர்மறை ஆற்றலை அதிகரிக்கும், தம்பதியரிடையே மகிழ்ச்சியை கொண்டு வரும்.

2. சமையலறையில் உள்ள நீர் குழாயில், நீர் கசிவு இல்லாத வகையில் பார்த்துக்கொள்ளுங்கள். மேலும், நீர் குழாய் மாசு படியாத அளவில் சுத்தமாக வைத்துக்கொள்வது நல்லது.

3. சமையலறையில் குப்பைகளை தேங்க விடுவது கூடாது. குறிப்பாக, உணவு கழிவுகளை வீட்டில் தேங்க வைப்பது கூடாது என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**படுக்கையறையில் செய்ய வேண்டிய மாற்றங்கள்!**

கணவன் – மனைவி இடையே மனஸ்தாபங்கள் உண்டாகாமல் இருக்க, தம்பதியரின் படுக்கையறையில் வாஸ்து விதிமுறைகளை கடைபிடிப்பது அவசியம்.


1. வாஸ்து சாஸ்திரத்தின் படி, படுக்கையறையை தென்மேற்கு திசையில் அமைப்பது அவசியம்.

2. படுக்கையறையில் பயன்படுத்தும் படுக்கையின் தலைப்பகுதி, வாஸ்துப்படி தெற்கு அல்லது மேற்கு திசை நோக்கி இருப்பது நல்லது. இது, நேர்மறை ஆற்றலை அதிகரிப்பதோடு, உங்கள் உடல் ஆரோக்கியத்தையும் பாதுகாக்கும்.

3. படுக்கையறை சுவர்களுக்கு மிதமான வண்ணங்களை பூசுவது அவசியம். அடர் நிறங்களை பயன்படுத்துவது மனதளவில் உங்களை இறுக்கமாக மாற்றும், தம்பதியரிடையே கருத்து மோதல்களை அதிகரிக்கும். எனவே, மிதமான வண்ணங்களை பயன்படுத்துங்கள்.

4. படுக்கையறையில் உடைந்த கண்ணாடி, மீன் தொட்டி போன்ற கண்ணாடி பொருட்களுக்கு இடம் அளிப்பது கூடாது. கண்ணாடி போன்ற விரைவில் உடையும் பொருட்கள் மட்டும் அல்ல, கத்தி – ஊசி போன்ற கூர்மையான பொருட்களையும் வைப்பது கூடாது என நிபுணர்கள் வாஸ்து நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்!

## நகை கடன் இனி இவ்வளவு தான் கிடைக்கும்.. ரிசர்வ் வங்கியின் புதிய கட்டுப்பாடுகள் அமல்..!



புதுடெல்லி, ஏப். 01–

தங்கத்தின் மதிப்பை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் கடன்களுக்கு புதிய வரம்புகள் இன்று முதல் அமலுக்கு வந்துள்ளன. மத்திய நிதி அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, வங்கிகள் மற்றும் நிதி நிறு வனங்கள் இந்த மாற்றங்களை நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளன.

இதுவரை பொதுவான விதிமுறைகளின் கீழ் வழங்கப்பட்ட தங்கக் கடன்கள், இனி வாடிக்கையாளர்கள் கோரும் கடன் தொகையைப் பொறுத்து விகிதாச்சார அடிப்படையில் வழங்கப்பட உள்ளன. இதன் மூலம், சிறு அளவு கடன் பெறுபவர்களுக்கும், அதிக தொகை கடன் கோருபவர்களுக்கும் தனித்தனி வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

புதிய விதிகளின்படி, ரூ.2.5 லட்சம் வரை தங்க அடமானக் கடன் பெறுபவர்கள், தங்கள் தங்கத்தின் சந்தை மதிப்பில் அதிகபட்சம் 85 சதவீதம் வரை கடன் பெறலாம். நடுத்தர வர்க்கத்தினருக்கு சலுகை அளிக்கும் வகையில் இந்த உயர்ந்த விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், ரூ.2.5 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை கடன் பெறுவோருக்கு 80 சதவீதம் வரை மட்டுமே கடன் வழங்கப்படும். மேலும், ரூ.5 லட்சத்திற்கு மேல் கடன் பெற விரும்புவோருக்கு தங்கத்தின் மதிப்பில் இருந்து 75 சதவீதம் வரை மட்டுமே கடன் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அதிக தொகை கடன்களுக்கு கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உலகச் சந்தையில் தங்கத்தின் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களால் நிதி நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்புகளைத் தவிர்க்கும் நோக்கில் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தங்கத்தின் விலை திடீரென குறைந்தால், அதிக அளவில் கடன் வழங்கியிருப்பது வங்கிகளுக்கு அபாயமாக மாறக்கூடும் என்பதால் இந்த மாற்றம் அவசியமானதாக கருதப்படுகிறது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## ஃபிட்டாக இருந்தாலும் இளைஞர்களுக்கு ஏன் மாரடைப்பு?



ஒரு காலத்தில், மாரடைப்பு என்பது 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படும் ஒரு திடீர், மரணத்தை விளைவிக்கும் நோயாகக் கருதப்பட்டது. ஆனால் இப்போது, இதய நோய் அனைத்து வயதினரையும் பாதிக்கத் தொடங்கியுள்ளது. பெருநகரங்களில், மக்கள் அதிக வேலை அழுத்தத்தில் உள்ளனர், அதனால் அவர்களுக்குச் சரியாகச் சாப்பிடவோ, உடற்பயிற்சி செய்யவோ நேரம் கிடைப்பதில்லை. மேலும், மன அழுத்தத்தை எப்படிக் குறைப்பது என்பதில் அவர்கள் குழப்பத்தில் உள்ளனர், இது பல இதய நோய்ப் பிரச்சனைகளுக்கு வழிவகுக்கிறது.

எனவே, இது பெரிய நகரங்களில் மட்டும்தான் என்று நினைக்க வேண்டாம். சிறிய நகர்ப்புறங்களில் கூட, 20, 30 மற்றும் 40 வயதுகளில் உள்ள இளைஞர்களிடையே மாரடைப்பு மற்றும் இதயம் தொடர்பான பிரச்சனைகளின் பாதிப்புகள் மெதுவாக அதிகரித்து வருகின்றன. உடல் தகவமைத்துக் கொள்வதை விட வாழ்க்கை முறைப் பழக்கவழக்கங்கள் வேகமாக மாறிவிட்டன, அதனால் இளம் மற்றும் ஆரோக்கியமான மக்களிடையே மாரடைப்பு அதிகரித்து வருகிறது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இருப்பது எப்போதும் ஆரோக்கியமாக இருப்பதைக் குறிக்காது. ஒரு உடற்பயிற்சிக் கூடப் பயிற்சி அல்லது மெலிந்த உடல், அதிக கொலஸ்ட்ரால், அழற்சி அல்லது ஆரம்பகால தமனித் தடிப்பு போன்ற ஆழமான பிரச்சனைகளை மறைக்கக்கூடும்.

கடந்த பத்தாண்டுகளில், இளம் மற்றும் சுறுசுறுப்பான பெரியவர்களிடையே இதயப் பிரச்சனைகள் அதிகரித்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.. அவர்களில் பலர் வெளித்தோற்றத்தில் ஆரோக்கியமாகத் தெரிகிறார்கள். இது அதிக மன அழுத்தம், உட்கார்ந்தே வேலை செய்யும் வாழ்க்கை முறை, ஒழுங்கற்ற தூக்கப் பழக்கங்கள், புகைப்பிடித்தல் மற்றும் மோசமான உணவுப் பழக்கங்கள் ஆகியவற்றின் கலவையாகும்,'' என்கிறார் அவர்.

தோற்றத்திற்கும் உள் ஆரோக்கியத்திற்கும் இடையிலான இந்த இடைவெளி, இந்தப் போக்கை ஆபத்தானதாக ஆக்குகிறது. மக்கள் தாங்கள் நலமாக இருப்பதாக அடிக்கடி நினைப்பதால், அவர்கள் மருத்துவப் பரிசோதனைகளைப் புறக்கணிக்கிறார்கள் மற்றும் அறிகுறிகளை அலட்சியம் செய்கிறார்கள். இன்றைய மன அழுத்தம் எப்போதாவது ஏற்படுவதல்ல, மாறாக அது தொடர்ச்சியானது. வேலைக்கான காலக்கெடு, டிஜிட்டல் பயன்பாடு, நிதி நெருக்கடி மற்றும் சமூக ஒப்பீடு ஆகியவை உடலில் தொடர்ச்சியான அழுத்தத்தை உருவாக்குகின்றன.

இந்த வகையான நாள்பட்ட மன அழுத்தம் கார்டிசோல் அளவை உயர்வாக வைத்திருக்கிறது. காலப்போக்கில், இது இரத்த அழுத்தத்தை அதிகரிக்கலாம், இரத்தச் சர்க்கரையைப் பாதிக்கலாம் மற்றும் இரத்த நாளங்களைச் சேதப்படுத்தலாம்.


இந்திய அரசின் ஆதரவுடன் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR) நடத்திய ஓர் ஆய்வில், வாழ்க்கை முறை மற்றும் மன அழுத்தக் காரணிகளால், இதய நோய் உள்ளிட்ட தொற்றா நோய்கள் இளம் வயதினரிடையே வேகமாக அதிகரித்து வருவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகளாவிய சுகாதார அமைப்புகளும் இதையே எதிரொலிக்கின்றன. மன அழுத்தம், செயலற்ற தன்மை மற்றும் உணவுமுறை ஆகியவை இளம் வயதிலேயே இதய நோய்கள் ஏற்படும் அபாயத்திற்கு முக்கியக் காரணிகளாக இருப்பதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிடுகிறது.

ஜிம்மில் ஒரு மணி நேரம் கடுமையாக உடற்பயிற்சி செய்துவிட்டு, பின்னர் அலுவலகத்தில் பத்து மணி நேரம் எழாமல் நாற்காலியில் அமர்ந்திருப்பது உங்கள் உடல் நலத்திற்குத் தீங்கானது. இந்த வகையான உட்கார்ந்த நிலையிலான வேலை உங்கள் வளர்சிதை மாற்றத்தை மெதுவாக்குகிறது மற்றும் உங்கள் உடல் கொழுப்பு மற்றும் சர்க்கரையைச் செயலாக்கும் விதத்தைப் பாதிக்கிறது.

ரத்த ஓட்டம் செயல்திறன் குறைகிறது. காலப்போக்கில், இது உயர் ரத்த அழுத்தம் மற்றும் தமனி விறைப்பு ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கிறது. நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பது, அவசர உணவுகள், இரவு நேரங்களில் இணையத்தில் உலாவுதல், பின்னர் தீவிர உடற்பயிற்சி. உடல் உழைப்பை விட சமநிலையின்மையே முக்கியமானது. ஒழுங்கற்ற தூக்கம் உடலின் உள்ளகக் கடிகாரத்தைச் சீர்குலைக்கிறது. இது இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் மற்றும் ஹார்மோன் சமநிலையைப் பாதிக்கிறது. தொடர்ந்து 6 மணி நேரத்திற்கும் குறைவாகத் தூங்குவது இதய நோய்களின் அபாயத்தை அதிகரிக்கிறது என்று ஆய்வுகள் காட்டுகின்றன.

## வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை அதிரடி உயர்வு!



சென்னை, ஏப். 01–

ஏப்ரல் மாதத்திற்கான வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டு சிலிண்டரின் விலை ரூ.203 உயர்ந்துள்ளது. வணிக சிலிண்டர் விலை ரூ. 2043.50 ஆக இருந்த நிலையில் ரூ. 2,246.50 ஆக உயர்ந்துள்ளது.

வணிக சிலிண்டர் விலை அதிகரித்தபோதும் வீட்டு உபயோக சிலிண்டர் விலை உயர்த்தப்படவில்லை.

மேற்காசிய போரால் சிலிண்டர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த விலை உயர்வு வியாபாரிகளுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# பங்குனி உத்திரம்: ஆன்மீக சிறப்பு மற்றும் வீட்டில் செய்ய வேண்டிய வழிபாடு!



பங்குனி உத்திரம் நாளில் தெய்வ திருமணங்கள் நடைபெற்றதாக நம்பப்படுகிறது. முருகன்–தேவயானை திருக்கல்யாணம் இந்த நாளின் முக்கிய சிறப்பு. வீட்டில் சுத்தம் செய்து கோலம் போட்டு பூஜை செய்ய வேண்டும். பால், பழம், பாயசம் வைத்து நிவேதனம் செய்வது வழக்கம். “ஓம் சரவணபவா”, “ஓம் நமசிவாய” ஜபம் செய்வது நல்லது. திருமணமானவர்கள் இணைந்து வழிபட்டால் குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும்.

திருமணம் ஆகாதவர்கள் விரதம் இருந்து நல்ல துணை வேண்டி பிரார்த்திக்கலாம். பங்குனி உத்திரம் நாளில் மனதார பிரார்த்தனை செய்தால் பாவங்கள் நீங்கி, வாழ்க்கையில் புதிய தொடக்கங்கள் அமையும் என்று நம்பப்படுகிறது.

**பங்குனி உத்திரத்தின் சிறப்பு**

பங்குனி மாதத்தில் உத்திர நட்சத்திரம் சேரும் இந்த நாளில், தெய்வ திருமணங்கள் நடைபெற்றதாக நம்பப்படுகிறது. குறிப்பாக முருகப்பெருமான் மற்றும் தேவயானையின் திருக்கல்யாணம் இந்த நாளில் நடைபெற்றதாக புராணங்கள் கூறுகின்றன. அதேபோல் சிவபெருமான்–பார்வதி தேவி, ரங்கநாதர்–ஆண்டாள் போன்ற தெய்வங்களின் திருக்கல்யாணங்களும் இந்த நாளுடன் தொடர்புடையதாக கருதப்படுகிறது. இதனால், இந்த நாள் திருமண வாழ்வில் அமைதி, ஒற்றுமை மற்றும் வளம் வேண்டி வழிபடும் நாளாகும்.

வீட்டில் செய்ய வேண்டிய வழிபாடு முறைகள்

இந்த நாளில் அதிகாலையில் எழுந்து வீடு முழுவதும் சுத்தம் செய்து, கோலம் போடுவது நல்லதாக கருதப்படுகிறது. பின்னர் வீட்டில் உள்ள பூஜை அறையில் முருகன், சிவன் அல்லது குடும்ப தெய்வங்களுக்கு சிறப்பு பூஜை செய்யலாம். பால், பனங்கற்கண்டு, பழங்கள் மற்றும் பாயசம் போன்ற நிவேதனங்களை வைத்து அர்ச்சனை செய்வது வழக்கம். “ஓம் சரவணபவா” அல்லது “ஓம் நமசிவாய” போன்ற மந்திரங்களை ஜபிப்பதும் ஆன்மீக பலனை அதிகரிக்கும்.

திருமண வாழ்க்கை மற்றும் விரதத்தின் முக்கியத்துவம்

திருமணமானவர்கள் தம்பதியராக இணைந்து பூஜை செய்தால் குடும்பத்தில் அமைதி மற்றும் புரிதல் அதிகரிக்கும் என நம்பப்படுகிறது. திருமணம் ஆகாதவர்கள் நல்ல துணை கிடைக்க வேண்டி விரதம் இருப்பதும் இந்த நாளின் ஒரு முக்கிய அம்சமாகும். பெண்கள் குறிப்பாக இந்த நாளில் விரதம் இருந்து முருகனை வழிபட்டால் விரைவில் நல்ல திருமணம் நடைபெறும் என்று நம்பப்படுகிறது.

ஆன்மீக பலன்கள் மற்றும் நம்பிக்கைகள்

பங்குனி உத்திரம் நாளில் மனதார பிரார்த்தனை செய்தால் பாவங்கள் நீங்கி, வாழ்க்கையில் புதிய தொடக்கங்கள் அமையும் என்று நம்பப்படுகிறது.

குடும்ப உறவுகள் வலுப்பெறும், மன அமைதி கிடைக்கும், ஆரோக்கியமும் வளமும் அதிகரிக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. இதனால், இந்த நாள் ஆன்மீக வளர்ச்சிக்கும் குடும்ப ஒற்றுமைக்கும் மிக முக்கியமான நாளாக விளங்குகிறது.

# 6 முதல் 9 வரையிலான வகுப்புகளுக்கு ஆண்டு இறுதித்தேர்வு தொடக்கம்!



சென்னை, ஏப். 01–

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்வு முன்கூட்டியே நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி, பள்ளிக்கல்வித் துறை அட்டவணையை தயாரித்து சமீபத்தில் வெளியிட்டது. அதன்படி, 6 முதல் 9–ம் வகுப்பு வரையிலான மாணவ–மாணவிகளுக்கு ஆண்டு இறுதித் தேர்வு ஏப். 1–ல் (புதன்கிழமை) தொடங்கியது.

அதனைத் தொடர்ந்து 4, 5–ம் வகுப்புகளுக்கு வருகிற 6–ந்தேதியில் இருந்தும், 1, 2 மற்றும் 3–ம் வகுப்புகளுக்கு வருகிற 8–ந்தேதியில் இருந்தும் ஆண்டு இறுதித் தேர்வு தொடங்கி நடைபெற உள்ளது. மொத்தமாக வருகிற 16–ந்தேதிக்குள் தேர்வை முடிக்க ஏதுவாக அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. அதாவது தேர்தல் 23–ந்தேதி நடைபெற உள்ள நிலையில் அதற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாக ஆண்டு இறுதித்தேர்வு நடத்தி முடிக்கப்பட இருக்கிறது. தேர்வு முடிந்ததும் 17–ந்தேதியில் இருந்து மாணவ–மாணவிகளுக்கு விடுமுறை தொடங்கும் எனவும், ஆனால் ஆசிரியர்களுக்கு பள்ளி இறுதிநாள் வரை பணிக்கு வர அறிவுறுத்தப்படுவார்கள் எனவும் சொல்லப்படுகிறது. இதுபற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பை பள்ளிக்கல்வித்துறை விரைவில் வெளியிடும். விடுமுறை முடிந்து மீண்டும் பள்ளிகளை ஜூன் 4–ம் தேதி திறப்பதற்கு திட்டமிட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# முதல் தேர்தல் அறிக்கை-2026

1. அனைத்து கிராமத்தில் தூயகுடிநீர் இயந்திரவசதி செய்யப்படும்.
2. வீட்டு மின் இணைப்புக்கு 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும்.
3. மாநில பொழி கட்டாயம், தேசிய மொழியாக இந்தியும், உலக மொழியாக ஆங்கிலம் விரும்பினால் கற்கலாம்.
4. நகராட்சி, மாநகராட்சிகளில் இரவில் துப்புரவு பணி செய்யப்படும். பணியாளர்கள் அரசு ஊழியர் ஆக்கப்படுவர்.
5. 5 மணி முதல் 9 மணி வரை நகர பேருந்தில் அனைவரும் இலவசமாக பயணிக்கலாம்.
6. பத்திர பதிவு முடிந்த 60 நாட்களில் இல்லம் தேடி பட்டா வழங்கப்படும்.
7. அனைத்து துறை அரசு அலுவலகங்கள் 365 நாட்களும் தொடர்ச்சியாக செயல்படும்
8. அரசு அலுவலர்கள் தலைமையிடத்தில் கட்டாயம் தங்கி பணி புரிய வேண்டுமும்.
9. அரசு பணியாளர்கள் தங்கள் அசையும், அசையா சொத்துக்களை 3 மாத காலத்திற்குள் பணி பதிவேட்டில் பதிய வேண்டும்.
10. 10 மாதத்திற்குள் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்இ நடவடிக்கை எடுக்காத அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.
11. இரண்டு லட்சம் புதிய அரசு பணியிடங்கள் ஏற்படுத்தி தகுதியானவர்கள் பணி நியமிக்கப்படுவர்.
12. அரசு பணியை தடுத்தல், தாக்குதல் செய்பவர் மீது நடவடிக்கையும், அரசு சலுகை அனைத்தும் ரத்து செய்யப்படும்.
13. சட்டப்படி சாதிகள் ஒழிக்கப்படும்.
14. அரசு மருத்துவமனையில் 24 மணி நேரமும் மருத்துவர் கட்டாயம் இருப்பார், இலவச மருத்துவம் அனைவருக்கும் உண்டு.
15. அரசு பணி 25 ஆண்டுகள் மட்டுமே பின்பு கட்டாய ஓய்வு. ஓய்வு வயது 60. ஓய்வு ஊதியம் உண்டு.
16. 50 வயது முடிந்த அனைவருக்கும் 5000 வழங்கப்படும்.
17. முறையற்ற கனிம வள கடத்தல் முற்றிலும் தடுக்கப்படும். நடவடிக்கை மிக கடுமையாக இருக்கும்.
18. மக்கள் குறைதீர் மனுக்கள் மீது 3 மாதத்திற்குள் நடவடிக்கை எடுக்காத அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.
19. உயர்நிலை, மேல்நிலை பள்ளிகளில் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை அனைவரையும் ஒன்றிணைத்து நீதிபோதனை வகுப்பு நடத்தப்படும்.
20. மூத்த குடிமக்கள் அனைவரும் ஒருமுறை காசி, இராமேஸ்வரம், நாகூர், வேளாங்கண்ணி இலவசமாக அழைத்துச் செல்லப்படுவர்.
21. வனத்துறை, சுற்றுலாத்துறை புதிய கட்டுப்பாடுகளுடன் நவீனமாக்கப்படும்.
22. கோயில் உள் தடுப்புகள் நீக்கப்பட்டு அனைவரும் இலவசமாக விரைவு தரிசனம் காண வசதிகள் செய்யப்படும்.
23. ஆண்களுக்கு 40%, பெண்களுக்கு 10%, முதல் அமைச்சர் 15%, துறை உயர் அதிகாரிக்கு 5% இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படும்.
24. தமிழகத்தில் மூடப்பட்ட இரயில் நிலையங்கள் மீண்டும் திறந்து செயல்பாட்டிற்கு வரும்.
25. ஜம்மு– அவந்திபூரில் இடிக்கப்பட்ட சிவன், விஷ்ணு கோயில்கள் புது எழுச்சியுடன் கட்டப்படும்.
26. லஞ்சத்தில் சிக்கினால் ஆயுள் தண்டனையும், குடும்ப நபர்களுக்கு அனைத்து அரசு சலுகையும் ரத்து செய்யப்படும். பாலியல் குற்றத்திற்கு இது பொருந்தும்.

**வளமான தமிழகம் வலிமையான பாரதம் சமத்துவ அரசியல்**

26 அம்ச திட்டங்கள் நடைபெற தங்கள் ஆதரவை இந்திய அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்பலாம்.


**V.கல்யாணசுந்தரம்**
NO.1, அம்மன் கோயில் அருகில்,
சங்கரலிங்கபுரம் (அஞ்சல்),
விருதுநகர் மாவட்டம், பின்கோடு: 626119.

# வேலை வாய்ப்பு

## பஞ்சாப் மற்றும் சிந்து வங்கி 1000 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: பஞ்சாப் மற்றும் சிந்து வங்கி
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: JMGS I பிரிவில் 1000 உள்ளூர் வங்கி அலுவலர் பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 31.03.2026
கடைசி தேதி: 20.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://punjabandsind.bank.in/



## சினிமா துளிகள்..!

## தேர்தலா? சினிமாவா? ஏப்ரல், மே மாதங்களில் மோதும் படங்கள்!



தமிழ்நாடு எப்போதும் இரண்டு விஷயங்களுக்காகத் தான் உயிர்வாழும் ஒன்று அரசியல், இன்னொன்று சினிமா. 2026–ம் ஆண்டு மே மாதம் தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், அதற்கு இணையாகத் திரை யரங்குகளிலும் ஒரு மிகப்பெரிய போரே நடக்கப்போகிறது.

**1. சூர்யாவின் ‘கருப்பு’ (Karuppu) ஏப்ரல் 10 ரிலீஸ்?**

சூர்யாவின் நடிப்பில் மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள ‘கருப்பு’ திரைப்படம் ஏப்ரல் 10–ம் தேதி வெளியாகும் எனத் தெரிகிறது.

**2. தனுஷின் ‘காரா’ (Kara) ஏப்ரல் 30 சிக்கல்!**

தனுஷ் இயக்கி நடிக்கும் ‘காரா’ ஏப்ரல் 30–ம் தேதி ரிலீஸாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

**3. அஜித் குமாரின் ‘ரேசிங் ஃபிலிம்’ மே 1 ஸ்பெஷல்!**

தல அஜித் ரசிகர்களுக்கு இந்த மே 1 (அஜித்தின் பிறந்தநாள்) ஒரு டபுள் ட்ரீட்! இது வழக்கமான சினிமா அல்ல. அஜித்தின் கார் பந்தய ஆர்வம், ரேசிங் டிராக்கின் பின்னால் இருக்கும் உழைப்பு மற்றும் பிரபலங்களின் நேர்காணல்கள் அடங்கிய ஒரு முழு நீள ‘டாக்குமெண்டரி’ (Documentary).

**4. ‘ஜனநாயகன்’ (Jananayagan) மே 7 அல்லது 14?**

அரசியல் களத்தில் குதித்துள்ள விஜய்யின் ‘ஜனநாயகன்’ திரைப்படம், இன்னும் சென்சார் சான்றிதழுக்காகக் காத்திருக்கிறது. அரசியல் வசனங்கள் மற்றும் காட்சிகள் அதிகம் இருப்பதால், சென்சாரில் சில சிக்கல்கள் எழலாம் எனக் கூறப்படுகிறது. தேர்தல் முடிந்த கையோடு, மக்கள் ரிலாக்ஸாக இருக்கும் நேரத்தில் மே 7 அல்லது 14–ல் படத்தை இறக்கப் படக்குழு திட்டமிட்டுள்ளது.

2026 கோடைக்காலம் கோலிவுட்டிற்கு ஒரு அக்னி நட்சத்திரமாக இருக்கப்போகிறது. நான்கு பெரிய நட்சத்திரங்களின் படங்கள், இடையில் சட்டமன்றத் தேர்தல் எனத் தமிழ்நாடு மும்முரமாக இருக்கப்போகிறது. உங்கள் ஓட்டு யாருக்கு என்பது ஒருபுறம் இருக்கட்டும், உங்கள் ‘டிக்கெட்’ எந்தப் படத்திற்கு?

## அதிரடியாக உயர்ந்த தங்கம், வெள்ளி விலை!



சென்னை, ஏப். 01–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.3,040 உயர்ந்து ரூ.1,12,400–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.380 உயர்ந்து ரூ.14,050–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.15 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.265–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881





## அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி
## 2026 அம் ஆண்டு பங்குனி உத்திரம் திருவிழா அழைப்பிதழ்

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 2026ம் ஆண்டு பங்குனி உத்திரம் திருவிழா 26.03.2026ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி 04.04.2026ம் தேதி முடிய நடைபெறவுள்ளது.

**முக்கிய திருநாள்கள் விவரம்**

| விவரம் | நாள் | நேரம் |
|---|---|---|
| கொடியேற்றம் (திருஆவினன்குடி திருக்கோயில்) | 26.03.2026 | காலை 9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் |
| திருக்கல்யாணம் | 31.03.2026 | இரவு 7.00 மணிக்கு மேல் 8.00 மணிக்குள் |
| வெள்ளித்தேர் | 31.03.2026 | இரவு 09.00 மணிக்குமேல் |
| பங்குனி உத்திரம் | 01.04.2026 | பங்குனி உத்திரம் |
| திருத்தேர் | 01.04.2026 | மாலை 4.30 மணிக்கு மேல் திருத்தேரோட்டம் |
| திருவிழா நிறைவு (கொடியிறக்குதல்) | 04.04.2026 | இரவு 11.00 மணிக்கு மேல் கொடியிறக்குதல் |
| தங்கரத சுவாமி புறப்பாடு இல்லாத நாட்கள் | 30.03.2026 முதல் 03.04.2026 முடிய | |

பங்குனி உத்திரம் திருவிழாவில் பக்தர்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்து அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் திருவருளைப் பெற அன்புடன் அழைக்கிறோம்

### 1. திருக்கோயில் – பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள கட்டணமில்லா வசதிகள்

| வ.எ | திட்டத்தின் விவரம் | தொடங்கப்பட்ட நாள் | பயனடைந்தவர்கள் எண்ணிக்கை | பணமதிப்பு கூடுதல் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | மலைக்கோயிலில் பக்தர்களுக்கு காலை 8.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. (தொடங்கப்பட்ட நாள்.– 13.09.2012) | -- | 1,05,87,587 | 45,10,31,206.00 |
| 2. | மலைக்கோயிலில் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை பக்தர்களுக்கு கலவை சாதம் வழங்கப்பட்டு வருகிறது. | 29.06.2025 | 14,51,786 | 4,64,57,152.00 |
| 3. | 26.03.2026 முதல் 04.04.2026 முடிய 10 நாட்களுக்ககு பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்கு ஒட்டன்சத்திரம் அருள்மிகு குழந்தைவேலப்பர் திருக்கோயில் ராம்கோ மண்டபத்தில் 14000 பக்தர்களுக்கும், கொங்கூர் பக்தர்கள் ஓய்வு கூடத்தில் 6000 பக்தர்களுக்கும் திருக்கோயில் சார்பில் அன்னதானம் வழங்கப்படுகிறது. | 29.01.2023 | 5,15,916 | 1,80,57,060.00 |
| 4. | கிரிவீதியில் நாள்தோறும் பக்தர்களுக்கு இலவசமாக உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகிறது. | 01.12.2022 | 2,40,800 | 35,68,656.00 |
| 5. | மலைக்கோயிலில் நாள்தோறும் பக்தர்களுக்கு பஞ்சாமிர்தம் பிரசாதம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. | 23.04.2022 | 1,38,79,706 | 4,44,15,059.00 |
| 6. | மலைக்கோயிலில் கைகுழந்தைகளுக்கு திருக்கோயில் சார்பில் காய்ச்சிய பால் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. | 03.08.2024 | 1,98,120 | 7,38,988.00 |
| 7. | மலைக்கோயில் மற்றும் படிப்பாதையில் கோடை காலத்தில் நீர்மோர் வழங்கப்பட்டு வருகிறது. | 12.03.2022 | 40,22,445 | 84,47,135.00 |
| 8. | மலைக்கோயில் மற்றும் படிப்பாதையில் குளிர் காலத்தில் சுக்கு காபி வழங்கப்பட்டு வருகிறது. | 22.11.2022 | 18,60,000 | 18,97,200.00 |
| 9. | திருக்கோயில் சார்பில் 7 இடங்களில் பக்தர்கள் இலவசமாக முடி காணிக்கை செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டள்ளது. 1) சண்முகநதி முடி மண்டபம், 2) சரவணப் பொய்கை முடி மண்டபம் 3) அடிவாரம், ஒருங்கிணைந்த முடி மண்டபம் 4) தண்டபாணி நிலையம் முடி மண்டபம், 5) கிழக்கு கிரிவீதி, குறிஞ்சி விடுதி வளாகம் முடி மண்டபம் 6) மேற்கு கிரிவீதி, வின்ச் நிலையம் அருகில் – 1 & 2 | 05.09.2021 | 52,06,554 | 23,42,94,930.00 |
| 10. | பக்தர்களின் வசதிக்காக திருக்கோயில் சார்பில் 1) மலைக்கோயில், 2) வின்ச் நிலையம் 3) படிப்பாதை – யானைப்பாதை இடும்பன்கோயில் அருகில் மற்றும் 4) பாதவிநாயகர் கோயில் அருகில் ஆகிய 4 இடங்களில் முதலுதவி சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது | 31.12.2021 | 3,46,404 | 1,80,13,008.00 |
| 11. | வேலவன் விடுதி வளாகம் மற்றும் மலைக்கோயிலில் சித்த மருத்துவ சிகிச்சை மையங்கள் இயங்கி வருகிறது. | 25.12.2022 | 1,65,232 | 41,30,800.00 |
| 12. | பக்தர்களின் வசதிக்காக கிரிவீதியில் 39 பேட்டரி கார்கள் இயக்கப்பட்டு வருகிறது. | 08.03.2024 | 1,10,87,256 | 11,08,72,560.00 |
| 13. | கொடைக்கானல், அ/மி குறிஞ்சியாண்டவர் திருக்கோயிலில் பக்தர்களுக்கு நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. | 08.12.2025 | 37,289 | 16,78,005.00 |
| 14. | திருக்கோயில் சார்பில் பல்வேறு தேதிகளில் இலவச திருமணம் நடத்திவைக்கப்பட்டுள்ளது. | – | 26 | 18,20,000.00 |
| 15. | மாற்றுத்திறனாளி பக்தர்கள் கட்டணமில்லா வின்ச் – ரோப்கார், தரிசன வசதிகள் | 08.12.2025 | 16,095 | 32,19,000.00 |
| 16. | மூத்த தம்பதியர்களுக்கு சிறப்பு செய்தல் | 08.12.2025 | 112 | 2,80,000.00 |
| 17. | கழிப்பறைகள் மற்றும் குளியல் அறைகள் | ஆண்டு முழுவதும் வருகை தரும் பக்தர்கள் அனைவருக்கும் இந்த சேவை கட்டணமில்லாமல் இயங்கி வருகிறது. | | 7,50,00,000.00 |
| 18. | காலணி பாதுகாப்பகம் | | | 7,50,00,000.00 |
| 19. | வாகன நிறுத்துமிடம் | | | 5,45,05,400.00 |
| | **2. அறநிறுவனங்கள்** | | | |
| 20. | இத்திருக்கோயிலைச் சார்ந்த பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குதல் | 16.11.2022 | 10,14,280 | 8,92,56,640.00 |
| 21. | பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு மதிய உணவு வழங்குதல் | 26.12.2024 | 7,89,764 | 3,29,96,340.00 |
| 22. | பள்ளி மற்றும் கல்லூரி விடுதியில் தங்கி பயிலும் மாணவ மாணவியர்களுக்கு மூன்று வேலை உணவு | 08.12.2025 | 43,042 | 17,98,295.00 |
| 23. | அன்பு இல்ல மாணவர்கள் எண்ணிக்கை | – | 60 | 1,46,88,000.00 |
| 24. | தவில் மற்றும் நாதஸ்வர கல்லூரி மாணவர்கள் எண்ணிக்கை | | 103 | 2,57,45,880.00 |
| 25. | வேத பாடசாலை மாணவர் எண்ணிக்கை | | 47 | 1,14,21,000.00 |
| 26. | அர்ச்சகர் பயிற்சி பள்ளி மாணவர்கள் | | 63 | 1,54,45,080.00 |
| 27. | திருக்கோயில் சார்பில் இயங்கி வரும் மனநலகாப்பகம் | 04.02.2024 | 43 | 42,14,000.00 |
| 28. | ஓதுவார் பயிற்சி பள்ளி மாணவர்கள் எண்ணிக்கை | 01.10.2025 | 20 | 10,50,000.00 |
| | ஒட்டுமொத்த கட்டணமில்லா சேவை மதிப்பு தொகை ரூ. | | | 135,00,41,394.00 |
| | **3. கூடுதல் வசதிகள்** | | | |
| 29. | மாற்றுத்திறனாளி பக்தர்கள் 08.12.2025 தேதி முதல் கட்டணமில்லாமல் சுவாமி தரிசனம் மற்றும் வின்ச் – ரோப்காரில் பயணம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. 1) தரிசனம் – ஓராண்டிற்கு 5,00,000 பக்தர்கள், 2) ரோப்கார் – ஓராண்டிற்கு 60,000 பக்தர்கள் 3) வின்ச் – ஓராண்டிற்கு 25,000 பக்தர்கள் பயனடைகிறார்கள் | | | |
| 30. | மலைக்கோயிலில் சுவாமி தரிசனத்திற்கு க்யூ வரிசையில் காத்திருக்கும் பக்தர்களுக்கு திருக்கோயில் சார்பாக தண்ணீர் பாட்டில் மற்றும் பிஸ்கட் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | | | |
| 31. | பக்தர்களின் வசதிக்காக 31.03.2026 முதல் 02.04.2026 முடிய மூன்று நாட்களுக்கு கட்டணமில்லாமல் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | | | |
| 32. | மலைக்கோயிலுக்கு வரும் மூத்த குடிமக்கள், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சுவாமி தரிசனம் செய்வதற்கு தனி வரிசை ஏற்படுத்தப்பட்டுள்ளது. | | | |
| 33. | மலைக்கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் வசதிக்காக குடமுழுக்கு நினைவரங்கு, யானைப் பாதை, இடும்பன் கோயில், படிப்பாதை, கிரிவீதி பகுதிகள், மலைக்கோயில் ஆகிய இடங்களில் போதுமான சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. | | | |
| 34. | பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்க நடமாடும் மருத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன மற்றும் பக்தர்களுக்கு கூடுதலாக ஆம்புலன்ஸ் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. | | | |
| 35. | பக்தர்களின் வசதிக்காக கிரிவீதிகளில் கட்டணமில்லா குளியலறை மற்றும் கழிப்பறை வசதிகள் சுகாதாரமான முறையில் திருக்கோயில் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகள் ஆண்/ பெண் இருபாலருக்கும் தனித்தனியாக கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. | | | |
| 36. | இடும்பன் குளம் மற்றும் சண்முகநதியில் பக்தர்கள் நீராடும்போது விபத்துகள் ஏற்படாதிருக்கும் பொருட்டு, பக்தர்களுக்கு ஷவர்கள் மூலம் நீராடும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. | | | |
| 37. | இத்திருக்கோயில் சார்பாக 1) கிழக்கு கிரிவீதி சுற்றுலா பேருந்து நிலையம், 2) கோசாலா பேருந்து நிலையம் மற்றும் 3) தண்டபாணி சுவாமி மடம் வாகன நிறுத்தும் இடம் ஆகிய 3 இடங்களில் பக்தர்கள் இலவசமாக ஒரே நேரத்தில் 700 வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | | | |
| 38. | பக்தர்கள் வசதிக்காக மேற்கு கிரிவீதியில் கூடுதலாக பொருட்கள் வைப்பறை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. | | | |
| 39. | திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் 24 மணிநேரமும் பக்தர்களின் அவசர உதவிக்காக மூன்று தொலைபேசி எண்களுடன் கட்டுப்பாடு அறை வசதி ஏற்படுத்தபட்டு உள்ளது. (Toll free Number :– 1800 425 9925) (அவசர உதவி எண்கள் :– 04545 –240293 / 04545 –241293 / 04545 –242236) | | | |
| 40. | பக்தர்கள் விரைவாக தரிசனம் செய்வதற்கு ஏதுவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள (Queue) வரிசைகளில் அமைதியாகவும், விரைவாகவும் சென்று தரிசனம் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். | | | |

செ.மாரிமுத்து
இணை ஆணையர்/செயல் அலுவலர்
ரெ.சா.வெங்கடேஷ்
துணை ஆணையர்
ம.செந்தில்குமார்
உதவி ஆணையர்/நேர்முக உதவியாளர்

கே.எம்.சுப்பிரமணியன்
தலைவர். அறங்காவலர் குழு
க.தனசேகர்
சு.பாலசுப்பிரமணி
ஜி.ஆர்.பாலசுப்பிரமணியம்
சி.அன்னபூரனி
அறங்காவலர்கள்

விளம்பர உதவி:–




## அகில இந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் தேசிய மாநாடு; புதிய நிர்வாகிகள் அறிவிப்பு!








அகில இந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் தேசிய மாநாடு, ஆந்திர மாநிலத்தில் உள்ள விஜயவாடாவில் மார்ச் மாதம் 27, 28 & 29 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஆந்திர முதல்வர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு சிறப்பு அழைப்பாளாக கலந்து கொண்டு ( 28 – 03 – 2026 ) சிறப்புரை ஆற்றினார். மத்திய அமைச்சர் சந்திரசேகர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் தோழர் டி.எஸ். ஆர். சுபாஷ், பொதுச் செயலாளர் தோழர் கே. ரமேஷ்குமார், புதுச்சேரி மாநில தலைவர் தோழர் எம்.பி. மதிமகாராஜா, ஆகியோருடன் தேசிய குழு உறுப்பினர்கள் ஐயா எம்.டி. இராமலிங்கம், கோவை எஸ். மோகன்ராஜ், சதயம் பாபு, அலெக்ஸ் புரூட்டோ, காயல் அகமது சாகிபு, தூத்துக்குடி சங்கர், மஹாவீர் சந்த் ஜெயின், எழில் ஆசீர்வாதம், A1 கண்ணன், தருமபுரி சுரேஷ், தோழர் உமாபதி கிருஷ்ணன், டாக்டர் கே.வி.தேவராஜன், MJF Dr.T. தேவராஜ், K.A.T. அன்சாரி, P.G. பாலகிருஷ்ணன், மதுரை P. பாண்டியராஜன், காஞ்சிபுரம் S.R. மணிகண்டன், கிருஷ்ணகிரி C.S. சசிகுமார், தோழர் முத்து கண்ணன், ஆகியோருடன் சிறப்பு பிரதிநிதிகளாக, மாநில துணை தலைவர் கழுகு கே. ராஜேந்திரன், தூத்துக்குடி புறநகர் மாவட்டத் தலைவர் J. இருதய ஞான ரமேஷ், தலைமை அலுவலக நிர்வாகி பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 2026 – 2028 ஆண்டின் தேர்தல் முடிவுகள் இன்று மாலை அறிவிக்கப்பட்டது. இதன் பதவி காலம் மூன்று ஆண்டுகளாகும்.* அகில இந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் தேசிய செயலாளராக, தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் தோழர் டி.எஸ்.ஆர். சுபாஷ் மீண்டும் தேர்வு தேசிய செயற்குழு உறுப்பினராக கோவை எஸ். மோகன்ராஜ் தேர்வு செய்யப்பட்டு தேர்தல் அதிகாரியால் அறிவிக்கப்பட்டார். அகில இந்திய தலைவர்கள் மற்றும் அனைத்து மாநில நிர்வாகிகள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

## பழனி முருகன் கோயில் பங்குனி உத்திரம் திருவிழாவையொட்டி திருத்தேரோட்டம்!



பழனி ஏப். 01–

பழனி முருகன் கோவில் பங்குனி உத்திரம் திருவிழாவையொட்டி ஏப்ரல் 1 ல் மாலை 4:30 மணிக்கு திருத்தேரோட் டம் நடைபெற்றது பழனி முருகன் கோவில் ஆறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடாகும். இங்கு தமிழ் கடவுள் முருகப்பெருமான் ஞான தண்டாயுதபாணியாக வீற்றிருக்கிறார். பழனியில் நடைபெறும் திருவிழாக்களில் பங்குனி உத்திரம் திருவிழா சிறப்பானதாகும். இத்திருவிழா கடந்த மார்ச்26 ஆம் தேதி, திரு ஆவினன்குடி முருகன் கோவிலில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. உத்திர திருவிழாவையொட்டி, பழனி அடிவாரம் சௌமிய நாராயண கவர நாயக்கர் மண்டபத்தில் (மார்ச் 31–ல்), முருகன் வள்ளி தெய்வானை ஆகியோருக்கு திருக்கல்யாணம் நடைபெற்றது. அதன் பின்பு முருகன் வள்ளி தெய்வானை ஆகியோர் திருமண கோலத்தில், வெள்ளி ரதத்தில் திருவீதிகளில் திருஉலா வரும் காட்சி நடைபெற்றது. முன்னதாக



திருத்தேரில் வீற்றிருந்த முருகன் வள்ளி தெய்வானையை கண்டு பக்தி பெருக்கில், வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா, வீரவேல் முருகனுக்கு அரோகரா, ஞான தண்டாயுதபாணி சுவாமிக்கு அரோகரா என்று பக்தி பெருக்கில் கோஷமிட்டனர். ஏப்ரல் 1ஆம் தேதி பழனி அடிவாரம் கிரி வீதியில் திருத்தேரோட்டம் மாலை 4:30 மணிக்கு தொடங்கி நடைபெற்றது. இதற்கான விழா ஏற்பாடுகளை, பழனி கோவில் நிர்வாக அதிகாரி மாரிமு த்து, துணை ஆணையர் வெங்கடேசன், உதவிஆணையர் செந்தில்குமார், மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை திண்டுக்கல் மாவட்ட எஸ்பி பிரதீப், பழனி டிஎஸ்பி தனஜெயன், இன்ஸ்பெக்டர் மணிமாறன் ஆகியோர் செய்து வருகின்றனர்.
















Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020